[2nd August 1965.

Boards for the Welfare of Prisoners in Jails

* 54 *Q.*—SRI S. J. RAMASWAMI : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state—

(*a*) whether any boards, to look after the welfare of the prisoners undergoing imprisonment in jails, are constituted; and

(*b*) if so, the details thereof?

கனம் திரு. கோ. பூவராகன் : (அ) ஆம்.

(இ) அரசாங்க அதிகாரிகளையும் அரசாங்கச் சார்பற்றவர்களை யும் கொண்டு ஒவ்வொரு சிறைச்சாலையிலும் பார்வையாளர் குழு ஒன்று அமைக்கப்படுகின்றது. சென்னை நகரில் போலீஸ் கமிஷன ரும், வெளியூர்களில் அந்தந்த மாவட்டக் கலெக்டரும் இக் குழு விற்கு தங்கள் அலுவலால் தலைவராவர். இக்குழு காலாண்டிற்கு ஒரு முறை கூடி கைதிகளின் தேவைகளைப் பரிசீலனை செய்கின்றது.

திரு. எம். எஸ். மணி : அந்தக் குழுவுக்கு உறுப்பினர்கள் எந்த அடிப்படையிலே அமர்த்தப்படுகிறார்கள் ? அரசாங்கம் அவர்களை நியமிக்கிறார்களா ? அப்படியானால் அவர்களுக்கு யோக்கியா தாம்சம் என்ன இருக்கவேண்டும் ?

கனம் திரு. கோ. பூவராகன் : அந்தந்த மாவட்டப் பார்வை யாளர்களை நியமிப்பதற்கு அங்கு இருக்கிற கலெக்டர், டெப்யூடி சூபரின்டெண்டெண்ட் பரிசீலனை செய்து இங்கே அனுப்புகிறார்கள். இங்கே பரிசீலனை செய்து தலைமை சிறைச்சாலை நிர்வாகி சிபார்சு செய்து அனுப்புகிறார்கள். இதைப் பார்த்து அரசாங்கம் அவர்களை நியமிக்கிறார்கள்.

திரு. முனு. ஆதி : இந்தக் குழுக்களில் சட்டசபை உறுப்பினர் கள் பங்கு எடுத்துக்கொள்கிறார்களா ?

கனம் திரு. கோ. பூவராகன் : அதுபோன்ற தகவல் என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் பதில் சொல்ல முடியும்.

திரு. வை. சங்கரன் : கைதிகளின் தேவைகள் பரிசீலிக்கப்படும் என்று அமைச்சர் சொன்னார்கள். அம்மாதிரிப் பார்த்துப் பரிசீலனை செய்ய என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது, என்ன அதிகாரம் இருக்கிறது ?

கனம் திரு. கோ. பூவராகன் : இந்தக் குழு அவ்வப்பொழுது அங்கே இருக்கும், 'குறைகள் புத்தகத்தில்' எழுதிவைக்கப்படு மானால், அவற்றை மேல் அதிகாரிகளுக்கு அனுப்பி பரிசீலனை செய்து நிவர்த்திக்கப்படுகின்றன.

Vigilance Institutions

* 55 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state the total number of vigilance institutions in the State and the expenditure incurred towards their maintenance and receipts from them during 1963–64?

2nd August 1965]

கனம் திரு. கோ. பூவராகன் : இம்மாநிலத்தில் 13 ஒழுக்கக் கண்காணிப்பு நிலையங்கள் உள்ளன. 1963-64-ல் அவற்றின் பராமரிப்பிற்காகச் செலவான மொத்த தொகை ரூ. 2,92,060 இவ்வாண்டில் அவைகளிடமிருந்து கிடைத்த வரவினம் ரூ. 21,437.

* 56 *Q.*—SRI M. V. KARIVENGADAM : Will the Hon. the Minister for Information and Publicity be pleased to state the number of persons (women and girls) committed to vigilance institutions during the year 1963?

கனம் திரு. கோ. பூவராகன் : 1963-ல் மகளிர் ஒழுக்கக் கண்காணிப்பு இல்லங்களுக்கு 123 பேர் அனுப்பப்பட்டனர்.

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, இந்த ஒழுக்கக் கண்காணிப்பு நிலையங்களில் அவர்களுக்கு என்னென்ன வேலைகள் கொடுக்கப்படுகின்றன ?

கனம் திரு. கோ. பூவராகன் : அவர்களுக்கு, புத்தகம் பைண்ட் செய்தல், காய்கறி போடுதல், பின்னல் வேலை, தையல் வேலை முதலியவைகள் சொல்லிக் கொடுக்கப்படுகின்றன.

திரு. எம். வி. கரிவேங்கடம் : தலைவர் அவர்களே, இத்தகைய ஒழுக்கக் கண்காணிப்பு நிலையங்களில் வைக்கப்படுகிறவர்களுடைய எண்ணிக்கை அதிகமாக இருக்கிறதா அல்லது குறைவாக இருக்கிறதா?

கனம் திரு. கோ. பூவராகன் : 1962-ம் ஆண்டைவிட 1963-ம் ஆண்டில் குறைவுதான்.

திரு. ம. கமலநாதன்: தலைவர் அவர்களே, ஒழுக்கக் கண்காணிப்பு நிலையங்களில் பெண்கள் நிரந்தரமாக வைக்கப் படுகிறார்களா? அல்லது அவர்களுக்கு திருமணம் செய்து வைக்க அரசாங்கம் முன் வருகிறதா ?

கனம் திரு. கோ. பூவராகன்: அவர்கள் நல்ல முறையிலே திருந்தி வருகிறார்கள் என்று தெரிந்தால், மாப்பிள்ளைகள் கல்யாணம் செய்து கொள்கிறேன் என்று முன்வந்தால், உண்மையில் அப்படி வருகிறவர் பெண்ணைக் கல்யாணம் செய்து கொண்டு வாழ்க்கை நடத்துவாரா என்று பரிசீலனை செய்து, திருமணம் செய்து கொள்ள அனுமதி கொடுக்கப்படுகிறது.

திரு. ம. கமலநாதன்: அப்படிக் குடும்ப வாழ்க்கை நடத்துகிற பெண்களின் எண்ணிக்கை என்ன என்று அறிவிக்க முடியுமா?

கனம் திரு. கோ. பூவராகன் : அதைப்பற்றி தகவல் இப்போது என்னிடம் இல்லை. தனிக் கேள்வி போட்டால், தொகுத்துக் கொடுக்கப்படும்.

திரு. எ. கோ. பாலகிருஷ்ணன் : நல்ல முறையில் திருந்தி வருகிறவர்கள் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள் என்று சொன்னார்கள். அந்த திருமணச் செலவை யார் செய்வது ?

கனம் திரு. கோ. பூவராகன்: திருமணச் செலவை மாப்பிள்ளை தான் செய்வார்.